# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2023 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு (திருத்தச்) சட்டம்

---

[*2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2023, ஒற்றோபர் மாதம் 20 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *2023 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு (திருத்தச்) சட்டம்*

*[2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச. வ.- ஓ. 29/2023*

## *2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயர்*

***1.*** *இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தின் 6 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

***2.*** *இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவானது அதன் (3) ஆம் உட்பிரிவில், (உ) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-*

*"(உ) முப்பத்தியொரம் பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வானூர்தி நிலையத்தில், அப்பிரிவின் (ஐ), (ஒ), (ஓ), (ஔ) அல்லது (க) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட வான்வழிச் சேவைகளை வழங்குவதற்கான சேவைவழங்குனர்களாக இருப்பதற்கு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களை நியமிக்கலாம்:*

*ஆயின், 31 ஆம் பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்படும் ஏதேனும் வானூர்தி நிலையத்தில் அதன் கண் குறித்துரைக்கப்பட்ட வான்வழிச்சேவைகளை வழங்குவதற்காக இப்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட சேவைவழங்குநரொருவர் சம்மதிக்காதவிடத்து, அமைச்சர் இப்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட வான்*

வழிச்சேவைகளை வழங்குவதற்கு வேறு எவரேனும் சேவை வழங்குநரை நியமிக்கலாம்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*